(ஊ). ஊராட்சிகள் (திருத்த)ச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுபதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(எ). ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்)திருத்தச் சட்டச் முன் வடிவைபேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10-40]

(ஏ.) நகர்ப்புற நிலவரி (திருத்த)ச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

[1980 ஆகஸ்ட் 1]

"தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த)ச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1980) கீழ்க்கண்ட 21 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற வேண்டும்."

1. திரு. துரைமுருகன்
2. திரு. பாபு ஜனார்த்தனன்
3. திரு. இரெ. இராசமாணிக்கம்
4. திரு. உ. சுப்பிரமணியன்
5. திரு. ப. சிவஞானம்
6. திரு. சி. பழனிமுத்து
7. திரு. என். சங்கரய்யா
8. திரு. மு. அம்பிகாபதி
9. திரு. கே. தனுஷ்கோடித் தேவர்.
10. திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்
11. திரு. கோவைத்தம்பி
12. திரு. கு. அ. செங்கோட்டையன்
13. திரு. எம். பிச்சை
14. திரு. சு. முத்துக்கிருஷ்ணன்
15. திரு. துரை ராமசாமி
16. திரு. கோ. விஸ்வநாதன்
17. திரு. தா. சாமிக்கண்ணு
18. திரு. ச. அங்குசாமி
19. திரு. இரா. சண்முகம்
20. திரு. பெ. திருமாறன்
21. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுவிலே இல்லாதவர்கள், யாராவது, ஏதாவது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டத்தில், 'டைரக்டிவ் பிரின்சிப்பில்ஸ்' என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதி ஒரு 'வெல்ஃபேர் ஸ்டேட்டை', ஒரு சமுதாய நல ஸ்டேட்டை உருவாக்குவதற்காக, அரசு பின்பற்ற வேண்டிய சில ஒழுக்க நெறிகள்—அந்த அடிப்படையில் தனியாரிடத்திலே சில சொத்துக்கள் பெருகக் கூடாது என்ற சோஷலிச கருத்துக்கள் அதிலே வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையை ஒட்டித்தான் இது வெறும் நிலங்களுக்கு மட்டுமல்லாமல், நகர்ப்புற நிலங்களும் தனி நபரிடத்திலே குவியக் கூடாது என்ற வகையில், நகர்ப்புற நிலங்களுக்கு நிலவரி விதிக்கின்ற முறையிலே இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதா பல கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதை செலக்ட் கமிட்டிக்கு, பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டுமென்று நான் முதலிலே யோசனை சொல்ல விரும்புகிறேன். காரணம், இந்த மசோதாவைப் பொறுத்தமட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு விளக்கம், இந்த 'தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவிலே' சில விதி விலக்குகள் கொடுத்திருக்கிறார்கள். அர்பன் லாண்ட் டாக்ஸ் போடுவதற்கு சில விதிவிலக்குகள் கொடுக்கின்ற அதிகாரத்தை இந்தச் சட்டம் கூறுகிறது. எதெதெற்கு விதி விலக்கு என்றால்.

To amend Section 29(K) for empowering the Government to grant exemptions to Urban land owned by such educational religious Charitable or Philanthropic institutions as may by specified in the notification.

இந்த அரசு நகர்ப்புற நிலவரி விதிப்பதில் சிலவற்றிற்கு விதி விலக்குகளைத் தருவதற்காக, இந்த அமென்ட்மென்ட்டைக் கொண்டு வந்திருக்கிறது. அதிலே, கல்வி நிலையங்கள், மத ஸ்தாபனங்கள், அது போல் தர்ம நிலையங்கள் இவைகளுக்கெல்லாம் அர்பன் லாண்ட் டாக்ஸ் கட்டுவதிலிருந்து விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இதிலே ஒரு முக்கியமான ஒரு சட்டப் பிரச்சினையை கவனிக்க இந்த சர்க்கார் தயங்கக் கூடாது, என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வாசகத்திலே சொல்லப்படுகிற .

Government to grant exemptions to urban land owned by such educational religious........

1980 ஆகஸ்ட் 1] *[திரு. அ. ரகுமான்கான்]*

என்று சொல்கிறபோது, கல்வி நிலையங்கள்போல் இருப்பதை, மத ஸ்தாபனங்கள் போல் இருப்பதை, என்று பொதுவாக 'இவைகளைப் போன்றவைகளை' என்று சொல்லப்படுகிற காரணத்தினாலே, கல்வி நிலையங்கள் இவைகள் தான், மத ஸ்தாபனங்கள் இவைகள்தான், தர்ம ஸ்தாபனங்கள் இவைகள் தான் என்று தெளிவாக—'அந்த 'சச்' என்ற இடத்திலே following institutions குறிப்பாகக் குறிப்பிட வேண்டும். அப்படி குறிப்பிடாத காரணத்தால் பல்வேறு ஸ்தாபனங்கள், உண்மையிலே அவைகள் இத் தகைய ஸ்தாபனங்களாக இருக்கின்றனவோ இல்லையோ, அவைகள் இதற்குள்ளே நுழைந்து விடுகின்ற வாய்ப்பிருக்கிறது. அர்பன் எக்சம்ப்ஷன் என்ற விதிகளுக்குள்ளே புகுந்து கொண்டு பல தவறுகளை செய்வதற்கு, தவறான விதிவிலக்குகளைப் பெறுவதற்கான வாய்ப்பு இந்த சட்டத்திலே இருக்கிறது. எனவே இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு சட்டத்திலே Statement of Objects and Reasons காரண காரிய விளக்கங்களை இந்த மசோதா கொண்டு வரப் பட்டுள்ள இந்த சட்டத்திலே இன்னொரு கருத்து சொல்லப் படுகிறது.

"to substitute the existing section 6-B, dispensing with the distinction between "residential" and "non-residential" urban land" அதற்கு முன்பு பழைய சட்டத்திலே இது குடியிருப்பு உள்ள பகுதியாக இருந்தாலும், நான் ரெசிடன்சியல் ஏரியாவாக இருந்தாலும் Total extent of urban land நகர்ப்புற நிலங்கள் அனைத்துக்குமே ஒட்டுமொத்தமாக அர்பன் டாக்ஸ் விதிக்கப்பட்டது. நான் ரெசிடன்சியல் ஏரியாவா, ரெசி டன்சியல் ஏரியாவா என்று பிரித்து, கிளாசிபிகேஷன் பண்ணு வதற்கான நிலை பழைய சட்டத்திலே இருந்தது. அதற்குள்ள வேறுபாட்டை இந்த சட்டம் நீக்குகிறது. இது முறையாக இருக்க முடியாது. நான் ரெசிடன்சியல் என்று எடுத்துக்கொண் டால் இங்கே உள்ள மவுண்ட்ரோடு வேல்யுவும் அரும்பாக்கத்தில் உள்ள இடத்தின் வேல்யுவும் வித்தியாசம் இருக்கிறது. எனவே மவுண்ட்ரோடு நான் ரெசிடன்சியல் ஏரியாவாக இருப்பதால் அங்கே அதிக டாக்ஸ் இருக்கின்றது. அதைப்போல குடியிருப்புப் பகுதிகளில் குறைவாக இருக்கிறது. மவுண்ட்ரோடு விலைக்கும் குறைந்த விலை உள்ள இடத்திற்கும் டாக்ஸ் போடுகின்ற நிலை பழைய சட்டத்திலே இருந்தது, ஆனால் இப்போது வந்திருக் கின்ற சட்டம் கழுதைக்கும், குதிரைக்கும் வித்தியாசம் தெரி யாத நிலையில் இருக்கிறது. இதிலே நியாயம் இருக்கமுடியாது. ஆனால் இங்கேதான் நமக்குச் சந்தேகம் எழுகிறது. அந்த சட்டத் திலே இருந்த இந்த ரெசிடன்சியல், நான் ரெசிடன்சியல் என் பதை நீக்கும் அவசியம் ஏன் ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் விளக்கம் சரியாக இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, குதிரையின் விலை வேறு, கழுதையின் விலை வேறு. காரணம் அவைகளின் தன்மையைப் பொறுத்தது. அதைபோலத்தான் ரெசிடன்சியல் ஏரியா, நான்ரெசிடன்சியல் ஏரியா என்று டாக்ஸ் போடுகிற போது இரண்டும் வெவ்வேறாக இருக்க வேண்டும். அப்படித் தான் பழைய சட்டத்திலே இருந்தது. இதிலே இந்த கிளாசிபிகேஷன் நீக்கப்பட்டிருக்கிறது. இது சரியாக இருக்க முடியாது. எனவே அதையும் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிகவும் வேடிக்கையான ஒன்று. நீங்கள் இந்த சட்டத்தினுடைய நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த 1980ம் ஆண்டு நிலவரிச் சட்டத்திலே முன்பு இருந்த சட்டத்திலே Urban Land Ceiling Act-லே

எந்த தனி நபரும் $2\frac{1}{2}$ கிரவுண்டுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது, விதி விலக்கு இருந்தால் வைத்துக்கொள்ளலாம் என்று இருந்தது........ (மணி அடிக்கப்பட்டது).

[முற்பகல் 10-50]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்து இருக்கக்கூடிய தமிழ்நாடு 1980 ஆண்டு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டத்தின் மீது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதில் வரி சம்பந்தமான விஷயங்கள் உள்ளன. அவைகளை எல்லாம் ஆராய்ந்து நல்ல முறையிலே பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டிய விஷயங்களாகும். அதனால் தான் அதைப் பொறுக்குக் குழுவிற்கு விடும்படியான ஆலோசனை வந்து இருக்கிறது என்று நான் கருதுகிறேன். பெரிய நகரங்களோடு, மாநகரங்கள் மற்றும் உள்ள சாதாரண முனிசிபாலிட்டிகள் போன்ற நகரங்கள், அந்த நகரங்களைச் சுற்றி இருக்கிற பல புதிய இடங்களை நகரங்களுக்குள் கொண்டுவருகிறபோது, இந்தச் சட்டம் நேரடியாகவே அங்கே விஸ்தரிக்கப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட புதிய இடங்களுக்கும் முன் இருந்த இடங்களுக்கும் இருக்கும்படியான வித்தியாசங்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த வரிவிதிப்புகளைப் பற்றி எல்லாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒரிரு விஷயங்களை எடுத்து விளக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்த செக்ஷன் 29—விலக்குகள் என்று போடப் பட்டுள்ள பகுதி அதில் 'கல்வி குறித்து நேரடியாகத் தொடர் புள்ள காரியங்களுக்காக பள்ளிகள், கல்லூரிகள், அல்லது பல் கலைக்கழகங்கள் பயன்படுத்தும் நகர்ப்புற நிலம்' என்று குறிப்பாக இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இதைச் சொல்லி, 'ஆனால் அத்தகைய நிறுவனங்களுக்கு சொந்தமானதும், கீழ்க்கண்டவாறு உள்ளதுமான நிலம் இதிலே அடங்காது' என்று குறிப்பிட்டு, ஏற்கனவே இருக்கிற விதியை நான் சொல்கிறேன்.

'(1) காலியாக உள்ள நிலம் அல்லது வருமானம் தரும் கட்டி டங்கள் கட்டப்பட்டுள்ள நிலம். அவையெல்லாம் இதற்குள்ளே, இந்த விதிவிலக்குகளிலே அடங்காது' என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்போது அரசு கொண்டு வந்து இருக்கும் படியான திருத்தத்திலே சொல்லப்பட்டு இருப்பது....

"கல்வி சமய அறநிலையம் அல்லது தொண்டு நிறுவனங் களுக்குச் சொந்தமான யாதொரு நகர்ப்புற நிலம்" என்று எல்லா வற்றையும் உள்ளடக்கி உள்ளது பிரிவு (கே) என்பதில். அப்படி யானால் இது அத்தனையும் விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது என்று அர்த்தம்.

ஏற்கனவே இருந்திருக்கக்கூடிய ஷரத்தில் காலியாக உள்ள நிலங்கள், அதற்கு விதிவிலக்குக் கொடுக்கப்படமாட்டாது. வரு மானம் தரும் கட்டிடம் கட்டப்பட்டுள்ள நிலங்கள், அதற்கும் விதி விலக்குக் கொடுக்கப்படமாட்டாது. விதி விலக்கு—பயன் படுத்தப்படும் நிலங்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று தெளி வாக பழைய ஷரத்தில் இருக்கிறது. இப்போது வருவதில், இது அத்தனையையும் சேர்த்து விதிவிலக்குக் கொடுக்கப்படுவது என்று ஒட்டுமொத்தமான நிலையை அரசு வழங்கியிருக்கிறது.

அதே மாதிரி தான் மற்றும் உள்ள அறநிலைய ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் (கே) பிரிவில் சொல்லப்படுவது—'இப் பிரின் கீழ் விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசு அறிவித்து வெளி யிட்டு குறிப்பிடக்கூடிய சமய அறக்கட்டளை அல்லது சமுதாயத் தொண்டுக் காரியங்களுக்காக பயன்படுத்தப்படுகிற நகர்புற நிலம்' என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்படி வராத நிலங்களுக்கு அறநிலையமானாலும் சரி, அல்லது வேறு விதமான தொண்டு நிறுவனங்களாக இருந்தாலும் சரி அதற்கு விதி விலக்கு இல்லை என்பது பழைய சட்டத்தில் இருந்து இருக்கிறது. காலியாக உள்ள நிலம், வருமானம் தரும கட்டிடம் கட்டப்பட்டுள்ள நிலம், இந்த இரண்டும், அந்த அறநிலையங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அல்லது சமுதாய சேவை அல்லது தொண்டு செய்யும் ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் கூட அப்படிப்பட்டவர் களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது வந்துள்ளதில் இதை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து 'கே' பிரிவில் கல்வி, சமய, அறநிலைய

அல்லது கொடை நிறுவனங்களுக்கு சொந்தமான அனைத்து நிலங்களுக்கும் விதிவிலக்கு என்று இருக்கிறது. அது சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து என்னவென்றால் அத்தனைக்கும் சேர்த்து விதிவிலக்கு கொடுக்க வேண்டியதில்லை என்பது. கல்விக்கூடங்களோ, கல்லூரிகளோ, கலாசாலைகளோ எதுவாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு நேரடியாகப் பயன் படக்கூடியவைகளுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுத்தால் போதும். வாடகைக்கு விட்டிருக்கிற கட்டிடங்கள், சும்மா கிடக்கின்ற பல ஏக்கர் நிலங்கள் இவைகளுக்கு விதிவிலக்கு தேவையில்லை. அவைகளுக்கு வரி விதிக்கலாம்; வரிவசூல் செய்யலாம்: அதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வரும்.

நான் இதைத் சொல்வதற்குக் காரணம், பல கல்வி ஸ்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் 10 ஏக்கர், 15 ஏக்கர் நிலத்தை சும்மா போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களுக்கு விலக்கு அளித்தால் பின்னால் அதை அவர்கள் வேறு காரியங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள சௌகரியமாக இருக்கும். அதேமாதிரியாகத்தான் கட்டிடங்கள் இருக்கிற நிலமும். ஆகவே, அவைகளுக்கு விலக்கு அளிக்கக்கூடாது.

அதேமாதிரிதான் அறநிலையங்கள் அல்லது சமுதாயத்திற்கு இருக்கிற ஸ்தாபனங்கள் சொந்தமாக வைத்திருக்கும் நிலங்களும் இருக்கின்றன. ஏராளமான நிலம் இருக்கிறது. நிலங்களில் கட்டிடங்கள் கட்டி, அதன் மூலம் நிறைய வருமானம் வருகிறது. அவைகளுக்கு வரி விலக்குத் தேவையில்லை. வரி வசூலித்து, அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கவேண்டும். மேலும் பல்வேறு கருத்துக்களை நல்லமுறையில் விவாதித்து, இந்த சட்டத்திருத்தத்தை சீர்படுத்த வேண்டும் என்பதற்காக இதை பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

*திரு இரா. கருப்பையா : தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவில் கூறப்பட்டிருக்கிற சில விஷயங்களைப்பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக.

அதிக நிலம் வைத்திருக்கக்கூடியவர்களைவிட குறைந்த மனைகள் வைத்திருக்கக்கூடியவர்களுக்கும் நிவாரணம் கொடுக்கக் கூடிய வகையில் இந்தச் சட்டம் அமைக்கப்பட வேண்டும். அதிக நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு அதிகமான வரி விதிக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக, இதிலே கூறப்பட்டிருப்பது ஏற்கெனவே 20 மனைகளுக்கு மேற்பட்டால் அதற்கு வரி அங்காடி மதிப்பில் 2.5 சதவீதம் என்று இருக்கிறது. அதிலே திருத்த உத்தேசித்திருப்பது

20 மனைகளுக்கு மேற்பட்டிருந்தால் மொத்த அங்காடி மதிப்பில் 2 சதவீதம் வரி என்று இருக்கிறது. இந்த அடிப்படையில் இருப்பது சரியல்ல. அதிகமான நிலம் வைத்திருப்பவர்களுக்கு அதிகமான வரி விதிக்கவேண்டும். அந்த முறையிலே இந்த சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த விதிவிலக்கு என்று பார்த்தால், மத ஸ்தாபனங்கள், கல்வி ஸ்தாபனங்கள் என்ற பெயரால் உள்ள நிலங்களுக்கு முழுமையாக விதிவிலக்கு என்று இருக்கிறது. நடைமுறையிலே எபபடி இருக்கிறது என்றால், கல்விக் கூடங்கள் இயங்குகின்றனவோ இல்லையோ அவைபெயரால்நிலங்களை எழுதி வைக்கக்கூடிய பினாமி முறை இருக்கிறது இப்படி பினாமிமுறையில் எழுதிவைத்து, அவர்களே அந்த நிலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற நிலைமை எல்லாம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதனால் இம்மாதிரி விதிவிலக்கு கூடாது.

[முற்பகல் 11-00]

மேலும் இந்த மசோதாவை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டிய காரணத்தால் இதனை பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவ்வாறு விட்டிருப்பதை நான் ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, முன்பு நான் படித்த ஆய்வுக்குழு உறுப்பினர்கள் சிலரின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. ஆகவே அந்தக் குழு உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களையும் திரும்பப் படித்து விடுகிறேன்.

1. திரு. கோவைத்தம்பி.
2. திரு. கு. அ. செங்கோட்டையன்
3. திரு. சு. முத்துகிருஷ்ணன்
4. திரு. துரை ராமசாமி
5. திரு. தா. சாமிக்கண்ணு
6. திரு. கோ. விஸ்வநாதன்
7. திரு. ச. அங்குசாமி
8. திரு. இரா. சண்முகம்
9. திரு. பெ. திருமாறன்
10. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்

11. திரு. எம். பிச்சை

12. திரு. துரைமுருகன்

13. திரு. அ. இரகுமான்கான்

14. திரு. இராமலிங்கம்

15. திரு. எல். இளையபெருமாள்

16. திரு. நா. சுந்தரராஜ்

17. திரு. ஏ. சந்திரசேகரன்

28. திரு. மு. அம்பிகாபதி

29. திரு. முகமது இஸ்மாயில்

30. திரு. கே. தனுக்கோடித்தேவர்

21. திரு. என். சங்கரய்யா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1980) கீழ்க்கண்ட 21 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெறவேண்டும்:—

1. திரு. கோவைத்தம்பி

2. திரு. கு. அ. செங்கோட்டையன்

3. திரு. சு. முத்துகிருஷ்ணன்

4. திரு. துரை ராமசாமி

5. திரு. தா. சாமிக்கண்ணு

6. திரு. கோ. விஸ்வநாதன்

7. திரு. ச. அங்குசாமி

8. திரு. இரா. சண்முகம்

9. திரு. பெ. திருமாறன்

10. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்

11. திரு. எம். பிச்சை

12. திரு. துரை முருகன்

13. திரு. அ. இரகுமான்கான்

14. திரு. இராமலிங்கம்.

1980 ஆகஸ்ட் 1] [பேரவைத் தலைவர்]

15. திரு. எல். இளையபெருமாள்
16. திரு. நா. சுந்தரராஜ்
17. திரு. ஏ. சந்திரசேகரன்
18. திரு. மு. அம்பிகாபதி
19. திரு. முகமது இஸ்மாயில்
20. திரு. கே. தனுக்கோடித்தேவர்
21. திரு. என். சங்கரய்யா

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 131-வது விதியின் கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(ஐ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1980) கீழ்க்கண்ட 21 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப் பெறவேண்டும்:—

1. திரு. த. இராமசாமி
2. திரு. மு. சிவபெருமாள்
3. திரு. வி. கருப்பசாமிப்பாண்டியன்
4. திரு. செ. பட்டாபிராமன்
5. திரு. பி. என். பரமசிவக்கவுண்டர்
6. திரு. ஆர். மணிமாறன்
7. திரு. சேலம் மு. ஆறுமுகம்
8. திரு. எஸ். அரங்கநாதன்
9. திரு. கே. ஆர். கணபதி